முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 27—11—59 வெள்ளி | ஒலி: 3

நாட்டு வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதாது!

சென்ற பொதுத் தேர்தலின் போதே நோட்டடிப்பதினால் பண வீக்கம் ஏற்படும்; அதனால் விலைவாசி உயரும்—என்று தி. மு. கழகம் சொன்னது இப்போது நடைமுறைக் காட்சியாகிவிட்டது.

உலகப் போக்கு

பார்வையாளன்

பாழ்பட்டுப் போன பின்னால் பஞ்சசீலம் ஒரு கேடா?

பஞ்சசீலப் போர்வையை உதறிவிட்டு, எல்லைப் பிரச்சினையை சாக்காகக் கொண்டு சீனா, தனது போர்க் கொடியை உயர்த்திக் காட்டியபோது, அது உலகத்தின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பிவிட்டது என்பதில் நிச்சயம் சந்தேகம் இல்லை. இதனால் சீனா இந்தியாவின் பொறுமையையும் பலத்தையும் எடை போடுகிறதோ என்னவோ?

அதனுடைய கண்காணிப்புகளினால் சீனா இரண்டு உண்மைகளை நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும். ஒன்று....எல்லையில் நடக்கும் ஆக்ரமிப்புக்களை சமாளிக்கவோ தடுக்கவோ இந்தியா உடனே நடவடிக்கை எடுக்காது! இரண்டு...தன்னைப் போல இந்தியா சரமாரியாகப் பொய்களைப் பேசி அவைகளை நிசமாக்க முயலாது, பேச்சினால் புண்படுத்தாது—என்பது! அதனால்தான் ஆக்ரமிப்பிலும் குறைவில்லை....குற்றச் சாட்டுகளுக்கும் குறைவில்லை...இவைகள் இரண்டிலுமே இந்தியா, சீனா யூகித்தது போலத்தான் நடந்து கொண்டிருக்கிறது — எல்லையோரத்தில் ஆக்ரமிப்பு நடந்திருக்கிறது என்பதைஅறிந்தவுடன் உடனே மேற்கொண்டு அம்மாதிரி நடக்காவண்ணம் தகுந்த நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டபின் பஞ்சசீலத்திற்கு முழுக்கு போட்டுவிட வேண்டாமா?

சீனா, அதாவது பஞ்சசீல உடனபடிக்கைக்கு ஒத்துக் கொண்ட ஒரு நாடு அதை உதறி எறியும்போது....இந்தியாவும் அதே பாதையில் நடைபோடுவதில் தவறொன்றும் இல்லையே! அதையெல்லாம் விட்டு விட்டு வழி வழியாக வந்திருக்கும் கோழைத்தனத்தை சமாதான வழி அகிம்சா முறை என்ற பேச்சுக்களினால் அலங்கரித்துக் காட்டினால்...?

கடுமையாகப் பேசி விடுவதால மட்டும், அது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு போதிய சமாதானமாகிவிட முடியாது. எதிரியை அப் பேச்சுக்கள் ஓரளவுக்கு யோசிக்க வைக்கும் என்பதென்னவோ உண்மை. ஆனால் வெறும் வார்த்தைகளினால் வெறியர்களுக்கு — எதற்குமே கவலைப்படாத எதையும் யோசிக்காதவர்களுக்கு — பயத்தைக் காட்ட முடியாது. விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மையும் — சிநேகித மனப்பான்மையும் அண்டை நாடான பாகிஸ்தானிகளிடமே பயனளிக்கவில்லையே! அந்த நாட்டிடம் இப்போது குறிப்பிடத்தக்க மாறுதல் தெரிகிறதென்றால், அங்கு பதவியில் இருப்பவர்கள், படை பலத்தினால் இந்தியாவை வளைத்துவிட முடியாது என்று கண்டு கொண்டிருக்கிறார்கள என்று அர்த்தம்.

அதைப்போலவே சீனாவுக்கும் இந்நிலை வலியுறுத்தப்படவேண்டும்! ஆனால்....இப்போது பிரதமர் நேருவின் பேச்சினால் எந்தவித பயனும் ஏற்படப்போவதில்லை. ஏனெனில் கடந்த நான்கு வருடங்களாக "இந்தியா — சீனா பாய்" என்ற கோஷங்களுக்கு நடுவே நடந்த சீனாவின் ஆக்கிரமிப்பு நோக்கத்தை யாரும் அறியவில்லை. பிரதமர் அறிந்திருந்தாலும் வெளியில் சொல்லவில்லை. அதனாலும், மக்கள் கொதித்து எழுந்தபோது, ஆக்கிரமித்த இடம் உபயோகத்திற்கு லாயக்கான இடமல்ல என்று பிரதமர் நேரு நொண்டிச் சமாதானம் சொன்னதாலும், சீனா இந்தியாவை நன்கு புரிந்துகொண்டிருக்கிறது...அதனுடைய நேசக்கரத்திற்குப்பின், ஒரு கத்தியும் இருந்திருக்கிறது என்பதை அறிய, இப்போதுதான் சமயம் கிடைத்திருக்கிறது இந்தியாவுக்கு!

சில வருடங்களுக்கு முன் "சீட்டோ" என்ற பாதுகாப்பு உடன்படிக்கையைப் பற்றி பேச்சு எழுந்தபோது.... "பாதுகாப்பா? யாருக்கு எதிராக? பைத்தியமா உங்களுக்கு?" என்று கேட்ட பாரதப் பிரதமர் இப்போது நிச்சயம் தெரிந்து கொண்டிருப்பார். நிலைமை இவ்வளவு நெருக்கடியாக இருந்தும், எதிரில் இருக்கும் அபாயத்தை உணராமல் சாவதானமாகப் பேசிக் கொண்டிருக்கும் தலைமை பீடத்தைப் பற்றி என்ன சொல்வது?

சோமநாதர் கோவிலின் மீது கஜினி முகம்மது படையெடுத்த போது, கோவில் அர்ச்சகர்கள், கஜினியை எதிர்த்துப் போரிடாமல் 'மூல ஸ்தான'த்தில் போய் நின்று கொண்டு மந்திரங்கள் ஓதிக் கொண்டிருந்தார்களாம், சோமநாதர் நேரில் பிரசன்னமாகி அவர்களைக் கஜினியிடமிருந்து காப்பாற்றுவார் என்ற தளராத நம்பிக்கையோடு!

அதைப் போல், பழைய நட்புறவைப் பற்றியும், நல்லெண்ணத்தைப் பற்றியும் பேசிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? ஆனால் சோமநாதர் ஆலயத்திற்கு ஏற்பட்ட கதி... இந்தியாவின் எல்லைக்கும் ஏற்படவேண்டும் என்று நாம் விரும்பவில்லை.

இருவரும் சந்தித்துப் பேசுவதால் ஒன்றும் நடந்துவிடாது என்றும் நாம் கூறவில்லை. பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கும் முன், பஞ்சசீல உடன்படிக்கையின்போது நிலை எவ்வாறு இருந்ததோ.... அந்த நிலை இப்போதும் வரவேண்டும். அதாவது ஆக்ரமித்த இடங்கள் பழையபடி இந்தியாவின் எல்லைக்குள் சேர்க்கப்பட வேண்டும். அதில்லாமல் இருந்த இடத்திலிருந்து பேசலாம் வாருங்கள் என்றால் அர்த்தமே இல்லை!

உள் நாட்டுத் 'தோழர்கள்' தினத்திற்கொரு புதுக் கொள்கையை வீசி, எல்லோரையும் குழப்பமடையச் செய்யாமல் இருப்பது அவர்களுக்கும் நல்லது....மற்றவர்களுக்கும் நல்லது.

அரசியல் குழப்பமும், அடக்கிய முயற்சியும்!

அடிக்கடி குழப்பம் நடந்து கொண்டிருக்கும் ஒரு இடத்தில், திடீரென ஒரு குழப்பம் நடந்தால், அது வியப்புக்குரிய ஒன்றல்ல. அதைப்போலத்தான சமீபத்தில் சூடானில் நடந்த புரட்சியும்!

ஜெனரல் ஆயுதப் புரட்சியை முளையிலேயே கிள்ளி விட்டார் என்றாலும், அவர் பதவிக்கு வந்த பின் இம்மாதிரி அடிக்கடி புரட்சிகள் நடக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை!

ராணுவத்தில் இருக்கும் சில கருங்காலிகள் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. கருங்காலிகளுக்கு புரட்சிக்காரர் ஒத்துழைப்பும் இருந்துவிட்டால் குழப்பம் விளையக் கேட்பானேன்? அரசியல் புகுந்துவிட்டால் ராணுவக் கட்டுப்பாடு தானே விடை பெற்றுக்கொண்டு போவது இயற்கை. அம்மாதிரி நிலைதான் சூடானின் ஏற்படும் விளைவுகளுக்குக் காரணம். ஜெனரல் ஆயுத ராணுவத்தில் இருக்கும் கருங்காலிகளைக் கண்டு பிடித்து தண்டித்துவிட்டால், நாட்டு முன்னேற்றத்திற்கு இனி தடையேதும் இருக்காது. சூடானும், அரேபிய ஜனநாயகக் குடியரசும் சமீபத்தில் செய்துகொண்ட நைல் நதியை உபயோகிக்கும் ஒப்பந்தம் ஆயுதத்தின் நிர்வாகத் திறனுக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டு. இதனால் நல்ல பயன் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. அரசியல் கட்சிகளுக்கு சூடானில் இடம் இல்லை. அதைப் போலவே ராணுவத்தில் இருக்கும் சில கலகக்காரர்களையும் ஒழித்துவிட்டால், தலைமறைவாக இருந்து ஆதரவு தேடித் திரியும் "மாஜி"களுக்கு நிச்சயம் மதிப்பு இருக்காது.

பிரச்சினையின் நிலைக்களன்— மேற்கு பெர்லின்!

மேற்கு பெர்லினில் வானொலி நிலையத்தை நிறுவ அமெரிக்கா முயற்சி எடுத்துக் கொள்வது, தனக்குப் பிடிக்கவில்லையென்று ரஷ்யா, தன் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. இதற்கு ரஷ்யா தகுந்த காரணங்களைக் கூறி இருக்கிறது. வானொலி நிலையத்தை, ஒரு புது இடத்தில் வைத்தால், அது நிச்சயம் பொய்ப் பிரச்சாரத்திற்காகவே உபயோகப் படுத்தப்படும் என்பது மட்டுமல்ல, தற்போது பெர்லினில் உள்ள அரசியல் நிலைமையை மேலும் மோசமாக்கவும் அது பயன்படும் என்று ரஷ்யா கருதுகிறது.

இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்து ஒரு நல்ல ஆரம்பத்திற்கு வழி வகுத்திருக்கும் இந்நேரத்தில், சமீபத்தில் நடக்கவிருக்கும் பெர்லினைப் பற்றிய பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிய—வானொலி நிலைய ஏற்பாட்டினால் தடையேதும் இருக்கக் கூடாதல்லவா?

இவைகளையெல்லாம் உத்தேசித்துத்தான் ரஷ்யா மூன்று பெரிய தலைவர்களுக்கும் 'வானொலி நிலைய விஷயமாக உடனே நடவடிக்கை எடுக்குமாறு' தாக்கீது அனுப்பியிருக்கிறது — ரஷ்யாவின் கோரிக்கை நியாயமானதாகவே இருக்கிறது. யார் பகுதியில் யார் வானொலி நிலையத்தை அமைப்பது? இம்மாதிரி சில்லறைத் தகராறுகள் ஓயாமல் நடக்கும்போது பெர்லின் பிரச்சினைக்கு எப்போது முடிவு ஏற்படப் போகிறது?

★★★

பதவிப்பீடம் வேண்டுமா? இதோ ஒரு புது வழி!

* டில்லியை எதிர்த்துக் கிளம்பிய அந்தக் குரல் சேலத்திற்கும் மைசூருக்கும் ரயில்பாதை போடச் சொல்லிற்று. தொந்திரவு பொறுக்காத வட நாட்டு அரசாங்கம் தூக்கிப் போட்டார்கள் அவரை ஒரு துணை மந்திரியாக! கொடுக்கப்பட்ட பதவியின் ருசியை ரசித்துக் கொண்டிருக்கிறது அந்த உரிமைக் குரல்! அம்மட்டோ, வட நாட்டார்களை வெறுக்காதீர்கள் — என்று உபதேசம் செய்கிற அளவிற்கு உயர்ந்திருக்கிறார். அவர் வேறு யாருமில்லை. எஸ். வி. ராமசாமி — எனும் சேலத்துப் பெருமகன்!

* மீண்டும் டில்லியின் நடவடிக்கையை எதிர்த்து ஆங்கிலம் வேண்டும்; இந்தி வேண்டாம், என்றார், உரத்த குரலில்! டில்லியின் பார்வை அவர் மீது விழுந்தது. உடனே பதவி உயர்வு! டில்லியின் திட்டத்தை எதிர்த்தவர் டில்லியைக் கட்டிக் காக்கும் மந்திரியானார். அம்மட்டோ, வட நாடு, தென்னாடு — என்பதெல்லாம் வீண் கனவு; டில்லியிலிருந்து பிரிந்து வாழ்வது குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுவது போன்றது என்று கூறுமளவிற்கு உயர்ந்து விட்டார்! இவர் வேறு யாருமில்லை. நம் தமிழ் நாட்டவர், டாக்டர் சுப்பராயன்தான்.

* மீண்டும் ஒரு எதிர்ப்புக் குரல்! மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை. டில்லி எதேச்சதிகாரம் செலுத்துகிறது என்றது ஒரு குரல். உடனே அந்தக் குரலுடையவருக்கும் பதவி உயர்வு! காங்கிரஸ் ராஷ்டிரபதியாகப் போகிறார்! இவர் வேறு யாருமில்லை. ஆந்திர நாட்டு முதலமைச்சர் சஞ்சீவ ரெட்டி!

உயர் பதவிக்கு அலையும் பழைய காங்கிரஸ்காரர்களே! 'ஒப்புக்காவது' டில்லியை எதிர்த்துக் 'குரலெழுப்புங்கள்'! பதவி உயர்வு கிடைக்கும்!

வெள்ளி 27—11—59 சென்னை

அருப்புக்கோட்டை !

'இனிவரும் வெற்றிகள் எல்லாம் எமக்கே' என்று மதகுடித்த குரங்குபோல் ஆனந்தக் கூத்தாடிய காங்கிரசின் கால் உடைக்கப்பட்டு விட்டது, அருப்புக்கோட்டையில்! முன்பெல்லாம் தூத்துக்குடியையும் சிதம்பரத்தையும் குறித்துக்காட்டி குதூகலம் அடைந்திருந்தனர்; எதிர்க்கட்சியினரைக் குத்திக்குத்திப் பேசினர், காங்கிரசார். போதத் தேர்தலுக்குப் பின்னால் மக்கள் பண்பட்டு விட்டார்கள்; அவர்களது மனத் தராசிலே காங்கிரஸ் 'கன'மாகி விட்டது—என்றெல்லாம் கனம் அமைச்சர்கள் பேசித் திரிந்தார்கள்.

அதே மக்கள்தான்—'எது நமக்குத் தேவை?' என்று உணரத்தக்க சக்தி கொண்ட மக்கள்தான் அருப்புக்கோட்டையிலே 'காங்கிரஸ் தேவையில்லை' என்று உதறித் தள்ளியிருக்கிறார்கள்.

அங்கேயும் வெற்றியைக் கண்டுவிட வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் இயக்கம், ஆட்சியின் துணையோடு எடுத்துக்கொண்ட முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல; கைதேர்ந்த தேர்தல் புலிகள் அங்கேயே கூடாரமடித்தனர்; தேவையானபோது 'தேவையானவை' ஓடிவர ஏற்பாடுகள் வேறு பலமாகவே இருந்தன!

பதவியைப் பயன்படுத்தி எதை சாதிக்க முடியுமோ, அதைச் செய்தார்கள்—பயமுறுத்திப் பார்த்தார்கள். காந்தியாரின் பெயரைச் சொல்லி அவருக்குத் தர வேண்டும் ஓட்டு என்று கெஞ்சினார்கள்—சில இடங்களில் பல்லையும் காட்டினார்கள்,

எந்த இடத்திலும் நுழைவதற்கு வசதியுள்ள அதிகாரம் தன் நீண்ட கரங்களைச் செலுத்தி வாக்குகளைப் பறிக்கும் பகற் கொள்ளையிலே ஈடுபட்டது!

கிணறு வேண்டும் எங்கள் ஊரில்—என எவரேனும் கேட்டால், 'கிணறு மட்டுமல்ல; குளமும் வெட்டுவோம்; உங்கள் ஓட்டு காங்கிரசுக்கானால்' என்றாராம் ஒரு அமைச்சர்!

எங்கள் ஊர் பள்ளிக்கு இன்னும் சர்க்கார் மான்யம் கிடைக்கவில்லையே என்று முறையிட்டு குறைபட்டுக் கொண்டாராம் ஒரு முதியவர். "தேர்தல் முடியட்டும்! இந்த ஊர் ஓட்டுப் பெட்டிகளை எண்ணுகிற நேரத்தில் அதில் காங்கிரசுக்கு அதிக ஓட்டுகள் கிடைத்தால், உடனே மான்யத்திற்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்று உறுதிக்கு விலை கேட்டாராம் ஒரு அமைச்சர்.

இவைகளைப் போன்ற திரை மறைவுத் தில்லுமுல்லுகள் அநேகம் நடந்ததாகச் செய்திகள் கிடைக்கின்றன. அவை மட்டுமல்ல; சென்னையிலே இருந்து சூறாவளிப் பிரச்சாரம் செய்வதற்குப் பனிரெண்டு பேர் படையெடுத்துச் சென்றார்கள். இதிலே இன்னுமொரு வியப்பு என்னவென்றால் அந்தப் பனிரெண்டு பேரில் ஏழு பேர் பெண்கள்— ஐந்துபேர் ஆண்கள்! முதலமைச்சர் காமராசர், கக்கன், மத்திய உதவி மந்திரி ராமசாமி, ராஜாராம் நாயுடு, பொன்னுசாமி செட்டியார் எம். எல். சி.—ஆகியோரது குரல் கடந்த ஒரு மாதமாகவே அங்கே ஒலித்துக் கொண்டிருந்தது.

பெண்களை மட்டும் அதிகமாக பிரச்சாரத்திற்கு அனுப்பியதிலும் பெரியதொரு காரணம் அடங்கியிருந்தது. அந்தத் தொகுதியிலே பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகும். 41705 வாக்குகள் பெண்களுடையவை, அவர்களுடைய வாக்குகளை ஏகபோகமாகப் பெற்றுவிடலாம் என்ற கருத்தில்தான் மத்திய அமைச்சரின் மனைவி சீதாலட்சுமி ராமசாமி, சரஸ்வதி பாண்டுரங்கம், சட்டமன்ற உறுப்பினர்களான அனந்தநாயகி, குழந்தையம்மாள், லட்சுமிகாந்தம், பொன்னம்மாள், சௌந்திரம் ராமச்சந்திரன் ஆகியோர் முற்றுகையிட்டனர்!

இத்தகைய தேர்தல் தந்திரங்கள் எல்லாம்கூட முறியடிக்கப்பட்டுவிட்டன. காங்கிரசாரின் கூற்றைப்போலவே மக்கள் பண்பட்டு விட்டார்கள் என்பதை நம்பத்தான் வேண்டியிருக்கிறது.

மேலும், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் அங்கு காங்கிரசின் சார்பில் போட்டியிட்ட அபேட்சகரை ஆதரித்துப் பேசுவதற்குப் பதிலாக ஆச்சரியகரமான பேச்சுக்களை உதிர்த்தார்கள்; தேர்தல் பிரச்சார மேடையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கும் பெரும் பணியை மட்டும் ஏற்றுக் கொண்டார்கள்.

"தி. மு. கழகம் இந்தத் தேர்தலில் ஏன் அபேட்சகரை நிறுத்தவில்லை தெரியுமா? நிச்சயம் தோற்றுவிடும் என்ற பயத்தில்தான். ஆகவேதான் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வருகின்றன. இது மிகவும் தவறானது. ஜனநாயக ஆட்சியிலே எல்லோரும் போட்டியிடலாம்; ஆகவே எல்லா கட்சிகளும் தனித் தனியே போட்டியிடுவதுதான் முறை! இப்படி சேர்ந்து எதிர்ப்பது என்ன கேவலமான வேலை?"

—இப்படிக் கேட்டார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ராசாராம் நாயுடு. பள்ளியிலே அடிபட்ட பையன் ஒருவன், 'என் தெருவிலே வந்து என்னை அடிப்பாயோ' என்று வீராப்பு பேசினானும். அடித்தவன் தெருவிலேயேயும் வந்து கன்னத்தில் அறைந்தானும்; உடனே அடிபட்டவன் விக்கிக்கொண்டே 'தெருவிலே அடித்தாய்; என் வீட்டில் வந்து அடிப்பாயோ என்றானும். மற்றவன் அவன் வீட்டுக்கே போய் முதுகைச் சிவக்க வைத்தானும்; மறுபடியும் அடிபட்டவன் அழுது கொண்டே, 'வீட்டில் வந்து அடித்தாய்; உள்ளே போய் என் அப்பாவை அடிப்பாயோ' என்று கடைசியாக சவால் விட்டானும். இந்தப் பள்ளிக்கூடத்து மாணவனின் புலம்பலுக்கும், படித்துப் பதவிபெற்ற ராசாராம் நாயுடுவின் வாதத்திற்கும் என்ன வேறுபாடு?

காங்கிரசை எதிர்த்து அங்கே போட்டியிட்டு வெற்றியும் கண்ட தோழர் சுந்தரபாரதி எந்தக் கட்சியிலும் சேராத சுயேச்சை அபேட்சகர். அவரை, காங்கிரசை விரும்பாதவர் ஆதரித்தது ஆச்சரியமில்லையே! வேறு எந்தக் கட்சியினர் போட்டியிட்டிருந்தாலும் இதே நிலையும் முடிவும்தான் தோன்றியிருக்கும்!

'எந்தக் கட்சி தேவை?' என்று மக்களைக் கேட்கவில்லை அருப்புக்கோட்டையில். 'காங்கிரஸ் தேவையா? இல்லையா?' என்ற வினாக்குறிக்குத்தான் அத்தொகுதி வாக்காளர்களிடம் விடை கேட்கப்பட்டது. வேறு எவர் வந்தாலும் நாங்கள் வரவேற்கத் தயார்; காங்கிரஸ் என்ற பெயரில் எவரும் தேவையில்லை—இந்த முடிவைத்தான் நாட்டுக்குச் சொல்லிவிட்டார்கள், அவர்கள்.

"தேர்தலிலே தி. மு. க. வும் ஈடுபட்டிருப்பதால் காங்கிரசிற்கு வெற்றி நிச்சயம் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்! ஆனால் எவ்வளவு அதிகமாக வாக்குகளைத் தரப்போகிறீர்கள் என்று கேட்கத்தான் நான் வந்தேன்!" முதலமைச்சர் காமராசர் ஓரிடத்தில் இப்படி முழங்கியிருக்கிறார்.

வெற்றி நிச்சயம் என்ற முடிவை மனதிலே கொண்டு, நீதிக்குப் புறம்பான வழிகளிலும் ஈடுபட்ட ஆளுங் கட்சியினரின் திமிருக்கு அருப்புக்கோட்டையில் கூட்டு முயற்சியிலே சமாதி கட்டியது பாராட்டுக்குரியது; இதற்குப் பாடுபட்ட தோழர்கள் அனைவருமே நன்றிக்கு உரியவர்கள்!

அந்தச் சமாதி அடுத்து வருகின்ற தூத்துக்குடி தேர்தலுக்கும் ஒரு வழியமைத்துக் கொடுக்கும் என்று நம்புகிறோம்.

இனியும் பொய்யுரை ஏன்? இந்தியா ஒரு கலப்படமே!

★

இந்தியா ஒரே நாடுதான்—என்று உலகத்தின் கண்களை மூடி மறைத்து மாபெரும் 'பொய்' ஒன்றை ஆளவந்தவர்கள் செய்து வருகிறார்கள். ஆனால், நேரிலேயே இந்திய மண்ணில் அடியெடுத்து வைத்தவர்களுக்கு உண்மை தெரியாமலா போகும்? அமெரிக்காவிலிருந்து வருகின்ற 'நியூயார்க் டைம்'சின் நிருபர் கூறுகிறார்—படியுங்கள்:

"நாற்பதுகோடி மக்களைக் கொண்ட நேருவின் நாட்டில் பல விதத்திலும் வேறுபாடுடையவர்கள் வாழ்கிறார்கள். வெவ்வேறு மொழி பேசுவோரும், உணவு, உடையில் மாறுபட்டவரும், ஆரிய உடலமைப்புக் கொண்ட நேரு போன்றோரின் உடலமைப்பிலும், வேறுபட்ட மக்களும் உள்ளனர். காலஞ்சென்ற இந்தியச் சிந்தனையாளர் ஒருவர் "இந்தியா ஒரு நாடல்ல. இது. ஐரோப்பாவிலுள்ள நாடுகள் ஒன்றுக்கொன்று எவ்வாறு மாறுபட்டனவாக உள்ளனவோ அதைப் போன்ற நாடாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்!

—ராபர்ட் டிரெம்பல்

['டைம்ஸ் ஆப் இந்தியா'வில் வெளிவந்த 'ஜவகர்' என்ற கட்டுரையில்.]

மனிதனின் கதை

பி.சி. கணேசன்

59. "ஆமையல்ல அடங்கிக் கிடக்க; ஊமையல்ல பேசாதிருக்க!"...

அன்புள்ள மாதவி,

வால்டேர், ரூசோ, பெய்ன் போன்ற பேனு வீரர்களால் உருவான பிரஞ்சுப் புரட்சியும், பிரிட்டிஷ் மன்னனின் ஆதிக்கத்தை எதிர்த்து அமெரிக்க மக்கள் வெற்றிகரமாக நடத்தி முடித்த சுதந்திரப் போராட்டமும், ஐரோப்பிய மக்களிடையேயும் தென் அமெரிக்காவில் வாழ்ந்த மக்களிடையேயும் விழிப்புணர்ச்சியையும் புரட்சி வேகத்தையும் தோற்றுவித்திருந்தன. மன்னனும், அவனைச் சார்ந்த பிரபுக்கள் பணக்காரர்கள் மட்டுமின்றி, ஏழை மக்களும் உரிமைபெற்ற வாழ்வு வாழ வேண்டுமென்ற எண்ணம் எங்கும் பரவியது. ஆட்சிப் பொறுப்பிலும் அனைவரும் உரிமைபெறத் துடித்தனர். முடியாட்சிக்கு எதிராகவும் குடியாட்சிக்கு சாதகமாகவும் அரசியல் தத்துவங்கள் வளர ஆரம்பித்தன. இதன் காரணமாக தென் அமெரிக்கக் கண்டத்திலும், ஐரோப்பாக் கண்டத்திலும் புதிய விடுதலைக் கிளர்ச்சிகள் தோன்றலாயின.

வட அமெரிக்க ராஜ்யங்கள் பிரிட்டனுக்கு எதிராக சுதந்திரப் போர் நடத்தி, வெற்றி பெற்று ஐக்கக் குடியரசாக மாறியதைப் பார்த்த தென் அமெரிக்க ஸ்பானிஷ் காலனிகள் தங்கள் தாயகமான ஸ்பெயினுடைய ஆதிக்கத்திலிருந்து விடுபடக் கிளர்ச்சிகள் தொடங்கின. முதன் முதலாக தென் அமெரிக்காவைக் கண்டு பிடித்து அங்கே காலனிகளை ஸ்தாபித்தவர்கள் ஸ்பானிஷ்காரர்கள்தான். நெப்போலியன் ஸ்பெயின நாட்டை வென்று, அதன் அரியணையில் தன் சகோதரனை அமர்த்தவே ஸ்பெயின் குடிமகனல்லாத ஒருவன் தங்கள் மீது ஆட்சி செலுத்துவதை தென் அமெரிக்காவில் வசித்த ஸ்பானிஷ்காரர்கள் விரும்பவில்லை. தாயக ஆட்சியிலிருந்து விடுபடக் கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கி நடத்தியவன் சைமன் பெர்லிவார்!

விடுதலை வீரன் பொலிவார் தென் அமெரிக்காவின் வடகரையிலுள்ள காரகாஸ் என்னும் நகரில் 1783—ஆம் ஆண்டில் பிறந்தான். அவன் ஸ்பானிஷ் பிரபு வம்சத்தைச் சேர்ந்தவன். கல்வி பயில ஸ்பெயின் பிற்பகுதியில் பிரான்சில் தங்கியிருந்தான். பிறகு அமெரிக்க ஐக்ய நாடுகளுக்கும் விஜயம் செய்தான். தனனுடைய இருபத்து மூன்றும் வயதில் பிறந்த ஊர் வந்து சேர்ந்தவன் தென் அமெரிக்கக் காலனிகள் நடத்திய விடுதலைக் கிளர்ச்சியில் தீவிர பங்கு கொண்டான். 1811–ஆம் ஆண்டு மக்களின் விடுதலைச் சாசனம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதன்படி வட அமெரிக்க ராஜ்யங்கள் ஐக்ய நாடுகளாக உருப்பெற்றது போலவே தென் அமெரிக்காவின் வட மேற்குப் பகுதியிலுள்ள ராஜ்யங்கள் ஒரு சமஷ்டியாக ஒன்று சேருவதெனத் தீர்மானிக்கப்பட்டது. கலகக்காரர்கள் ஆரம்பத்தில் வெற்றி பெற்றாலும், மூன்றுண்டுகள் ஸ்பானிஷ் அரசாங்கப் படைகளுடன் கடுமையாக நடந்த போருக்குப் பிறகு, பொலிவரின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பொலிவரின் தலைநகரான காரகாஸ் நகரை ஸ்பானிஷ் படைகள் கைப்பற்றின. பக்கத்திலிருந்த கார்த்தஜீனு என்ற நகருக்குப், பொலிவார் தப்பியோடிப் போனான். அங்கே போய் மீண்டும் கலகத்துக்கு ஆயத்தம் செய்தான். மறுமுறையும் தோற்கடிக்கப்படவே, பிரிட்டிஷ் காலனியான ஜமாய்க்காவிற்குப்போய் சரணடைந்தான். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தென் அமெரிக்கா திரும்பி வந்தான். ஸ்பானிஷ் படைகளுடன் மீண்டும் கடும் போர் தொடங்கினான். வசதிக் குறைவான தன் படைகளுடன் பனிப்படலத்தால் மூடப்பட்டுக் கிடந்த ஆண்டிஸ் மலைகளைத் தாண்டினான். 1819-ல் ஸ்பானிஷ் படை கலகக்காரர்களால் முறியடிக்கப்பட்டது. இப்பொழுது வெனிசுலா, கொலம்பியா ஈக்குவேடர் என அழைக்கப்படும் நாடுகள் சமஷ்டியாக இணைந்து தங்களை ஒரு குடியரசு எனப் பிரகடனப் படுத்திக் கொண்டன. அதன் முதல் தலைவராக பொலிவார் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

முதல் ஐந்து ஆண்டுகள் பனமா, பெரு போன்ற நாடுகள் விடுதலையடைய இந்த சமஷ்டி உதவிற்று. அர்ஜென்டைனு, சில்லி ஆகியவை வேறு விடுதலைக் கிளர்ச்சியை ஆரம்பித்திருந்தன. ஆனல் அந்த நாடுகள் விடுதலை பெற்றவுடன் சமஷ்டியில் சேராமல் தனிக் குடியரசுகளாகத் தங்களை அறிவித்துக் கொண்டன. போர்ச்சுகல் ஆதிக்கத்தில் இருந்த பிரேசில், போர்ச்சுகலின் ஆதிக்கத்தை உதறி எறிந்து 1842-ல் சுதந்திர நாடாயிற்று.

விடுதலைக் கிளர்ச்சிகள்

பொலிவரின் இறுதிக் காலம் நிம்மதியாகக் கழியவில்லை. ஒற்றுமையின்மையால், அவன் கட்டிய சமஷ்டி, அவன் காலத்திலேயே உடைந்தது. அந்த நாடுகளின் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியும் பூசலும் ஒற்றுமையைக் கலைத்தது. வட அமெரிக்காவில் ஏற்பட்ட ஐக்ய நாடுகளின் ஒற்றுமையை தென் அமெரிக்க நாடுகள் கடைப் பிடிக்காமல் சிறிய நாடுகளாகச் சிதறுண்டன.

பொலிவரினுடைய சாதனைகளின் நினைவாக, தென் அமெரிக்கக் குடியரசு ஒன்று பொலிவியா என்ற பெயரைப் பெற்றது. சில மாகாணங்களும், நகரங்களும் பொலிவரின் பெயரால் அழைக்கப்பட்டன. அவன் பிறந்த நாடான வெனிசுலாவில், நாணயங்கள் அவனுடைய பெயரால் அழைக்கப்படுகின்றன. அதாவது, அந்நாட்டில் வழங்கும் மிகக் குறைந்த மதிப்புள்ள நாணயம் 'பொலிவர்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

அமெரிக்க சுதந்திரப் போரால் தென் அமெரிக்க நாடுகள் அரசியல் விழிப்பு பெற்றதுபோல், பிரஞ்சுப் புரட்சியின் விளைவாக சில இத்தாலிய நாடுகள் உரிமையுணர்வும் ஐக்ய மனேபாவமும் பெற்றன. இத்தாலி 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பல சிறு நாடுகளாகச் சிதறுண்டு கிடந்தது. ஒவ்வொரு நாட்டையும் ஒரு பிரபு, மன்னனைப் போலவே சர்வ சுதந்திரத்துடன் ஆண்டு வந்தான். குடும்ப வசதிகளைப் பெருக்கிக் கொள்ளுவதிலும், ஆடம்பரமான வாழ்க்கையிலும் காட்டிய அக்கரையை அந்தப் பிரபுக்கள் குடிமக்களிடம் காட்டவில்லை. பிரபுக்களின் படாடோப வாழ்வில் ஏழைகள் பரம ஏழைகளாக மாறினர். நெப்போலியன் இத்தாலியை வென்று பலமான ஆட்சியை நிறுவியபோது இத்தாலிய மக்கள் சில நன்மைகளைப் பெற்றனர். வசதியான போக்குவரத்து சாலைகள் அமைந்தன. நதிகளைக் கடக்கப் பாலங்கள் போடப்பட்டன. ஆனல் 1815—ல் நெப்போலியன் தோற்ற பிறகு ஐரோப்பிய நாடுகளின் மாநாடு ஒன்று வியன்னுவில் கூடியது. வரலாற்றில் இதற்கு வியன்னு மாநாடு என்று பெயர். மாநாட்டில் மக்கள் பிரதிநிதித்வம் பெற்றிருக்கவில்லை. சுயநலம் கொண்ட மன்னர்களும் பிரபுக்களுமே கலந்துகொண்டதால், மக்கள் கிளர்ச்சி தோன்ருமல் இலக்கும் வகையில் நாடுகளை சிறு கூருக்கி தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டு தங்கள் ஆதிக்கம் நிலைபெறச் செய்யும் வழியையே தேடினர். பிரஞ்சுப் புரட்சிக்கு முன்னிருந்த நிலையே நீடித்தது இத்தாலி பிரபுக்கள் கொழுத்தனர். ஏழைகள் வரிப் பளுவால் திணறினர்.

> .. இப்படி மூண்டிட்ட தீயிலே முடிகள் பல உருண்டன!

அதிருப்தியால் வாழ்ந்த இத்தாலிய மக்களின் கவனத்தைப் புரட்சிப் பாதையில் திருப்பிய எழுத்தாளன் மாஜினி! இத்தாலிய மக்களை விடுவிப்பதிலும், ஒன்றுபடுத்தி அவர்களை ஒரு தேசிய இனமாக்குவதிலும் மாஜினி முழு மூச்சோடு ஈடுபட்டான். குடிமகனின் கடமைகளை உணர்த்தும் வகையில் மாஜினி பல நூல்களை வெளியிட்டான். புரட்சிகரமாக எழுதியதாகவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டு மாஜினி நாடு கடத்தப்பட்டான. மாஜினி சும்மா இருக்கவில்லை. இத்தாலிய இளைஞர் கழகம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு, புரட்சிக்கு வேண்டிய ஆயுதங்களைச் சேகரிப்பதற்காக ஜெனேவாவில் இருந்த ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றும் முயற்சி செய்தான். இந்த இளைஞர் கழகத்தில் மாஜினிக்குப் பக்கபலமாக இருந்து ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டவர்களில் கரிபால்டி என்ற மாலுமி குறிப்பிடத்தக்கவன். இந்த சதி கண்டு பிடிக்கப்படவே மாஜினியும் கரிபால்டியும் தப்பியோடினர். கரிபால்டி தென் அமெரிக்காவுக்குப் போய் அப்பொழுது நடந்து கொண்டிருந்த விடுதலைக் கிளர்ச்சிகளில் பங்குகொண்டு நிறைய அனுபவம் பெற்ருன். பதினுன்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 1848—ல் தான் பிறந்த ஊரான நீஸ் நகருக்கு கரிபால்டி வந்து சேர்ந்தான். நீஸ் நகரிலிருந்து ஆண்ட இத்தாலியப் பிரபுவை, இத்தாலியர் அல்லாதவரை எதிர்த்துப் போர் நடத்த கரிபால்டி ஏற்பாடு செய்தான். அந்த முயற்சியும் தோல்வியடையவே கரிபால்டி மீண்டும் நாட்டைவிட்டு ஓடினன். இம்முறை ஐக்ய அமெரிக்காவுக்குப் போய் பத்து ஆண்டுகள் ஒரு மெழுகுவர்த்திச் சாலையில் தொழிலாளியாக வேலை பார்த்தான். பிறகு ஒரு வியாபாரக் கப்பலின் தலைமை மாலுமியானன்.

ஆனல், வாழ்க்கையில் எவ்வளவு அல்லல்கள் அனுபவித்த போதும், இத்தாலிய மக்களை சுதந்திரம்பெற்ற மக்களாக ஒன்றுபடுத்தும் லட்சியத்தை கரிபால்டி மறக்கவே இல்லை. இதற்கிடையில் மாஜினியும் சும்மா இருக்கவில்லை. தன் லட்சியத்துக்கு அனுதாபம் திரட்டும் வகையில் உழைத்து வந்தான். குறிப்பாக இங்கிலாந்தின் அனுதாபத்தைப்பெற பெரு முயற்சி செய்தான். 1859—ல் கரிபால்டி தாயகம் திரும்பினன். 1860—ல் தன்னுடைய சட்டை வீரர்கள் ஆயிரம் பேரை சிசிலித் தீவில் இறக்கினன். பல இத்தாலிய இளைஞர்கள் கரிபால்டியின் படையில் சேர்ந்தனர். சீக்கிரமே நேபில்ஸ் உட்பட தெற்கத்திய இத்தாலிய ராஜ்யங்களெல்லாம் கரிபால்டியின் வசம் வந்தன. வடக்கேயிருந்து சார்டினிய இளவரசன் கரிபால்டிக்குத் துணையாகத் தன் படைகளுடன் வந்து சேர்ந்தான். நேபில்ஸ் நகரில் கரிபால்டியும் அவனும் ஒன்று சேர்ந்தனர். ஐக்யமடைந்த இத்தாலியின் மன்னனாக சார்டினிய இளவரசன் பிரகடனப்படுத்தப்பட்டான். தன் கனவு நிறைவேறியபின், பல ஆண்டுகள் தான் உருவாக்கிய இத்தாலியில் வாழ்ந்தபின், 1882—ல் கரிபால்டி நிம்மதியாக உயிர் நீத்தான்.

பொலிவார் கனவு உருவாகி சிதைந்த நிலையில் காலமானன். கரிபால்டியும் மாஜினியும் கனவை உருவாக்கி; களிப்புற்றிருக்கும் நிலையிலேயே காலமானர்கள்.

இத்தாலி போலவே, கிரேக்க

[தொடர்ச்சி பக்கம்—12]

ஆதீனத்திலே அபர்யக் குறி!

நற்றமிழை இகழ்ந்தோரே; உங்கள் நாவிலே இல்லையோ, நரம்பு?

இமயமலையின் கடுங்குளிரையும்—வடக்கத்திப் பாலை நிலத்தின் வெங்கொடுமையையும்—சீறி எழுந்து சின்னா பின்னப் படுத்தும் காட்டு நதிகளையும் கடந்து — விந்தியத்திற்கு அப்பால் அடியெடுத்து வைத்த எவரையும் கவர்ந்திழுக்கும் காந்தமாய்—விழி ஈர்க்கும் மொழி ஒன்று இருந்தது என்றால், அது தமிழ்தான்; அதன் தனிச் சுவைதான்! ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து வந்தோர்—நிறத்திலும் பிறப்பிலும் மாறுபட்டோர் — இப்படி எவர் வந்தாலும் அந்த உயர்குடிச் செம்மொழிக்கு அடிமைப்பட்டுத்தான் போயிருக்கின்றனர்!

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலே பிறந்ததா; அன்றி காற்றின் மூச்சோடு கலந்து ஒலித்ததா — என்று காலத்தால் மூத்த தமிழுக்கு வயதைத் தேடித் தோற்றவர்கள் ஏராளம்!

வெளி நாடுகளிலிருந்து வேறு பணியேற்று வந்தவர்கள்கூட தமிழ் கற்கும் திருப்பணியே வாழ்வின் இலட்சியம் என்று குறிக்கோள் வகுத்திருக்கின்றனர்.

இன்றைக்கு ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் அலைகடலில் ஆடி வந்த கலமொன்று இந்திய உபகண்டத்தின் மேற்குக் கடற்கரையில் ஒதுங்கியது. வணிக நோக்குடன் வந்து, நாட்டை வளைத்துவிட முடிவு செய்த போர்ச்சுகீசியரின் தலைநகரான கோவாதான் அந்த இடம்! கையிலே பரமபிதாவின் திருமறை ஏந்தி கப்பலிலிருந்து கரையிலே இறங்கினார் ஒரு சாமியார். திருமறையின் பெருமையைப் பரப்பத்தான் திரைகடல் தாண்டி வந்தார், அவர்!

முற்றும் துறந்தவராக — உலகப்பற்றேதும் அற்றவராக— இந்த மண்ணிலே அடியெடுத்து வைத்த அந்த இத்தாலி நாட்டுக்காரரைத்தான் இங்கிருந்த தமிழ் பற்றிக் கொண்டது! வானுடைந்து வீழ்ந்தாலும்—மண்ணிடிந்து தாழ்ந்தாலும்—தானடையும் பெரும்பேறு இத்தரணியில் காணாத் தமிழ்ப் புலமையில்தான் இருக்கிறது என்றுணர்ந்தார், அவர். பாண்டி மண்டிலத்திலே படையெடுத்து வந்தார்; பொன்னும் பொருளும் பறித்து, பெற்ற நாட்டுக்கனுப்ப அல்ல; இந்த மண்ணுக்கே சொந்தமான மாத் தமிழ் ஏடுகளைத் தேட!

மதுரைச் சங்கத்தில் அந்த மத போதகர் நுழைந்தார்; தமிழ் ஏடுகளுக்குள் மறைந்தார். மீண்டும் அவர் தலை தூக்கியபோது, அவர் கரத்திலே எழுத்தாணி மின்னியது; மறு கரத்திலே ஓலை தோன்றியது! உலகாண்ட தமிழ் மொழியில் தனிப்புலமை பெற்றார்; மொழி தழைக்கப் பணியாற்றினார்.

அறுபத்தேழு வயது வரையில் தமிழகத்தில் திரிந்து—அந்தத் தொண்டுப் பருவத்திலும் தமிழ்த் தொண்டாற்றிய மேதையை தமிழகம் மறந்துவிடவில்லை; தமிழன்னையின் கழுத்திலே அவர் சூட்டிய முத்தாரம் தோன்றிக் கொண்டுதான் இருக்கிறது!

கற்றோரும் மற்றோரும் எளிதிலே பொருள் உணரும் "சதுரகராதி" ஒன்றை மேனாட்டு முறையில் தமிழில் ஆக்கினார். ஐந்து இலக்கணங்களையும் தொகுத்து, "தொன்னூல் விளக்கம்" என்ற தமிழ் இலக்கணச் சிறப்பு நூலை எழுதினார். தமிழ் மொழியின் தனிச் சிறப்பை வேற்று நாட்டார் கண்டு வியக்க "கொடுந்தமிழ் இலக்கண" நூலை உருவாக்கினார்.

அது மட்டுமல்ல; ஈரடிப் பெருநூலாம் திருக்குறளின் அறத்துப் பாலையும் பொருட் பாலையும் லத்தீன் மொழியிலே மொழிபெயர்த்தார்!

எங்கேயோ பிறந்தார்; எதற்கோ வந்தார்; காலத்தின் பெரும் பங்கைத் தமிழுக்கு அளித்தார்! அந்த கான்ஸ்டன்ரைன் ஜோசப் பெஸ்கி மறக்க முடியாதவர்; "வீரமாமுனிவர்" என்று சிறப்புப் பெயர் பெற்ற அவரது வரலாறு, தமிழ் வரலாற்றில் தக்கதோர் இடம் பெற்று விட்டது!

அந்த மத போதகரின் கதையை இந்த மண்ணிலே மடாலயம் அமைத்து — சமய மாண்பு வளர்க்கும் ஆதீனகர்த்தர் ஒருவருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியம் இப்போது நேர்ந்திருக்கிறது!

சாய உடை கட்டி — சைவ சமயம் காக்கும் 'தர்மபுரத் தம்பிரான்' — தவத்திரு அடிகள்தான் இந்தப் பிரச்சினைக்குரிய புதிரான மனிதர்! வீரமாமுனிவர் தமிழின் சிறப்பைப் பாடினார்! பாலும் பழத்தையும் பஞ்சணை மெத்தையையும் தவிர்த்து, பகலிலே வேறேதும் வேண்டேன் எனத் துறந்த இந்த முனிவரோ தமிழின் இழுக்குக்குத் தன்னால் இயன்ற பங்கினைச் செய்திருக்கிறார், இப்போது!

உண்டார்கள்; களித்தார்கள்; உறங்கினார்கள்; நினைவு வந்த நேரத்தில் இறைவனாரின் திருவிளையாடல்களைச் சொல்லிச் சிரித்தார்கள்—இப்படித் தோன்றுகின்ற மடாலயப் புராணத்திற்கு விரோதமாகத் தமிழைப் பற்றி இவர் பேசியிருக்கவே கூடாது!

தமிழன் தரங்கெடுக்கக் கருதியவர்கள் அன்று நுழைத்த வடமொழிச் சொற்களைக் களைந்தெறியும் காலம் இது; மாற்றார் நுழைவால் வேற்றுருக்கொண்ட தமிழின் பழஞ் சிறப்பை நிலைநாட்டப் பாடுபடுகின்ற சமயம்!

அந்த நற்செயலில் ஒரு கட்டம்தான், புல்லுருவிபோல் பாய்ந்து, தமிழன் புகழுக்கு இழுக்கு விளைத்த 'ஸ்ரீ', ஸ்ரீமதி' போன்ற செத்தமொழிச் சொற்களை விரட்டுவது! மொழி காக்கும் பெரும் படையின் முயற்சியால்—தமிழன்தான் என்ற உணர்ச்சி மிக்கோர் செயலால்—இன்று அந்த நச்சுச் சொற்கள் மறைந்துவருகின்றன.

அந்த இடங்களிலே 'திரு'வும் 'திருமதி'யும் புன்னகையோடு அமருகின்றன!

இந்த மாற்றம் கண்டு புழுங்கிச் சாவும் நெஞ்சங்களும் இருக்கின்றன என்றால் அவைகளைப் பற்றி என்ன நினைப்பது?

ஆப்பிரிக்கக் காடுகளிலே பிறந்து திரியவேண்டிய காட்டுமிராண்டிகள் இங்கு எப்படித்தான் பிறப்பெடுத்தனரோ?

அவர்கள் உடலிலே ஓடுவது இரத்தமா; அல்லது தெருவோரம் தேங்கி நிற்கும் மழை நீரா?

—இத்தகைய வினாக்குறிகள் தானே கிளம்பிவிடுகின்றன தூய தமிழை வெறுப்பவர்களை காணுகிற நேரத்தில்!

"திரு, திருமதி போன்ற சொற்களை நுழைப்பதற்கு இப்போதென்ன அவசரம் வந்துவிட்டது?"—என்று மனம் துணிந்து கேட்டார், சென்னை 'ராஜ்யத்'தின் மதியூக மந்திரி பக்தவத்சலம்!

அந்தப் பதவிப் பக்தாது பரணியிலே இன்று பகவானின் பக்தராம்—தருமபுர ஆதீன அதிபதி சொல்கிறார், அத்தகைய மொழி மாற்றம் பொருளற்றது—என்று!

"பண்டைக் காலத்திலிருந்தே தமிழ் மக்கள் தமிழுக்கும், வடமொழிக்கும் வேறுபாடு கண்டதில்லை! அந்த சம்பிரதாயத்தை இப்போது மட்டும் ஏன் மாற்ற வேண்டும்?"

—சமயம் காக்கும் அந்தச் 'சடைமுடி'தான் இப்படிப் பேசியிருக்கிறது நெல்லையிலே! இத்தனைக்கும் அவர் நிர்வகிக்கும் ஆதீனம் தமிழ்ப் புலவர் கல்லூரி ஒன்றை நடத்தி வருகிறது, தருமபுரத்திலே!

ஆனால் தமிழ் எம் உயிருக்கு நேர்—என்று போர்ப்பரணி பாடுகின்ற தமிழுணர்ச்சிக்குச் சவால் விடுகிறார், தருமபுரத்தார்! பகவான் நாமம் சொல்வதோடு தன் பணியை முடித்துக்கொள்ள வேண்டிய சிவனடியார் இப்பாழுங் கருத்தை வெளியிடலாமா?

"தற்போது கடைப்பிடித்து வருகின்ற பழைய பழக்க வழக்கங்களை மாற்றக்கூடாது!" என்பது அவருடைய வாதம். அப்படியானால், அவர் மரவுடை தரித்து மானத்தை மறைக்க முயன்ற மனித இனத்தின் ஆரம்பகாலத்திற்குச் செல்வாரா?

○ எழுத்தாணி பிடித்த மூதாதையரின் பாதையைப் பின்பற்றி, தன் கையிலிருக்கும் தங்கப் பிடி கொண்ட வெளிநாட்டுப் பேனாவை முறித்துப் போடுவாரா?

○ எழுதும் பணிக்கு உதவும் வெள்ளை நிறக் காகிதங்களைக் கிழித்தெறிந்துவிட்டுப் பனை ஓலையைத் தேடி ஓடுவாரா?

[தொடர்ச்சி பக்கம்—8]

முற்றும் துறந்தவரே!
உலகப் பற்றேதும் அற்றவரே!
உமது பல்லக்கு எங்கே?...பழமை எங்கே?

சென்ற இதழில்...

மண்டபத்தில் மயக்கமுற்ற முத்துநகை, மயக்கம்தெளிந்து மெள்ள கண் விழித்துப் பார்த்தாள். சிறிதுநேரத்திற்குப்பின் இருங்கோவேளின மரமாளிகையில் தான்கிடத்தப்பட்டிருக்கிறோம்—என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டாள்.

யார் தன்னை இங்கு கொண்டு வந்திருக்கலாம் — என்று கேள்வி எழுப்பினள், மனத்துக்குள்! பைத்தியக்காரி தாமரையின் வேலையாகத்தான் இருக்குமென முடிவு கட்டிக் கொண்டாள்.

'அத்தான்'—என்று தாமரை கிண்டலாகக் கூறினள், அருகமர்ந்தபடி!

தாமரை தன் ஆண் உடை சரியாக உள்ளதா என மார்பகத்தைத் தொட்டுப் பார்த்தாள். ஐயோ! பெண் உடையில் தான் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டாள், தாமரை தன்னைப் புரிந்து கொண்டாள் என்பதை அறிந்து முத்துநகை, 'இனி என்ன வந்தால் என்ன?' என்ற துணிவு பெற்றாள்.

பழிவாங்கும் உணர்ச்சியோடும், கேலி செய்யும் எண்ணத்தோடும் தாமரை முத்துநகையிடம் கிண்டல் மொழி பேசினள். சிறிது நேரம் கழித்து தாமரை முத்துநகையிருந்த அறையைப் பூட்டி விட்டாள்.

பாழ் மண்டபத்திலிருந்து முத்துநகையைக் காப்பாற்றி தாமரையிடம் ஒப்படைத்து விட்டுத் திருப்பிய இருங்கோவேள் பல குழப்பங்களோடே அரசியைச் சந்திக்கச் சென்றான். நோயாளிப் பெண்ணான தன் மனைவியின் நிலை கண்டு கண்ணீர் வடித்தான். அவனது லட்சியம் கரிகாலன் உயிரைப் பிடுங்குவது என்றறிந்து அரசனின் லட்சியமே தன் லட்சியம் என்று முழங்கினள்.

பிறகு இருங்கோவேள் அந்த அறையை விட்டு போனவுடன் ஒரு முடிவுடன் எழுகிறாள். அடிமேல் அடிவைத்து குதிரைக் கொட்டடிக்கு வருகிறாள். காவலனை குதிரை கொணடு வரச்சொல்லி, அதில் அமர்ந்து வேகமாகச் செல்கிறாள். அந்தச் சோலை காவலன் அரண்மனைக்கு நோக்கி ஓடுகிறான்.

★

26. அண்ணனை எதிர்த்தாள்

பரபரப்புடன் ஓடிவரும் குதிரைக் கொட்டடிக்காவலனை இருங்கோவேளின் மாளிகைக் காவலர்கள் வழிமறித்து நிறுத்தி 'என்ன விசேடம்?' என்று கேட்டார்கள். அவர்களிடம் அவன் விபரத்தைக் கூறி உடனே மன்னனைப் பார்க்க வேண்டுமென்று துடியாய்த் துடிக்கவே அவனை அழைத்துக் கொண்டு மன்னன் படுத்திருக்கும் இடத்திற்குப் போனார்கள்.

படுக்கையறையில் விளக்குமாத்திரம் 'மினுக் மினுக்' கென்று எரிந்து கொண்டிருந்தது. இருங்கோவேளைக் காணவில்லை. எங்கே போயிருக்கக் கூடும் என்று அவர்களால் உடனடியாக யூகிக்க முடியவில்லை. இருங்கோவேள் மன நிம்மதிக்காக வேண்டி எப்படியாவது தூக்கத்தைத் தழுவிக் கொள்ளலாம் என்றுதான பெருமுயற்சி செய்தான். சில சமயங்களில் சாவைக்கூட விரும்பியவுடன் அழைத்துக் கொள்ளலாம்—தூக்கத்தை அழைக்க முடியாமல் தவிக்க நேரிடும். கவலைகள், சாவை அருகாமையில் அழைத்துவரும் சக்தி பெற்றவை. ஆனல் தூக்கமோ கவலைகளைக் கண்டால் வெகு தொலைவில் ஓடிவிடும்.

படுக்கையில் புரண்டு புரண்டு இருங்கோவேள் தொல்லைப்படும் போது அவன் வாழ்க்கையின் ஏடுகளும் ஒன்றன்பின் ஒன்றாய்ப் புரண்டு கொண்டுதானிருந்தன. இன்றைய கருநாடகப் பகுதியான மைசூர் வட்டாரத்திலும் தமிழகத்தில் இன்றைய புதுக்கோட்டைப் பகுதிகளிலும் சிதறிக் கிடந்த வேளிர் குலத்தினரை ஒன்று திரட்டிப் பலம் வாய்ந்த வேளிர் குடிப் பேரரசு ஒன்றை நிறுவுவதற்காக அவன் திடசித்தத்துடன் முயற்சிகளை மேற்கொண்டான். அவன் முயற்சிகளுக்குப் பெருந்தடையாகத்தான் கரிகாலனின் சோழப் பேரரசு விளங்கி வந்தது. உறையூரையும் பூம்புகாரையும் முறையே பெருநகராகவும் தலைநகராகவும் கொண்டு வலிமை வாய்ந்த படைகளை அரணாக அமைத்து அரசோச்சிய சோழவேந்தன் கரிகாலனைத் தோற்கடித்தாலன்றித் தன் முயற்சிகள் வெற்றி பெற முடியாது என்ற பேருண்மை நாளுக்கு நாள் பருத்துக் கொண்டே வந்தது. எப்படியும் கரிகாலனைப் பழி தீர்த்து அவன் கல்லறை மீது வேளிர் குடிப் பேரரசை நிறுவலாம் என்று அவன் கண்டுவந்த கனவு, கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து வருவதை அவன் தெளிவாக உணரத் தலைப்பட்டு விட்டான். இறுதியாகக்கிடைத்த நல்ல சந்தர்ப்பமும் எப்படியோ நழுவிவிட்டது. இனிச் சோழ மன்னன் எச்சரிக்கையாகி விடுவான் என்று எண்ணி அவன் சோர்வடைந்தான்.

அப்படிச் சோர்வுற்று வருகிற நேரத்தில் அவனுக்கு உற்சாகம் தரக்கூடிய அளவுக்கு அவனது ராணி பெருந்தேவியாவது இருந்தாளா என்றால் அதுவுமில்லை.



அவனுக்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் உலகில் அவன் இதுவரையில் காணாத இன்பமும் அளிப்பதற்கு ஒருத்தி இருக்கிறாள். வீரபாண்டி என்ற பெயரில் அவளிடம் சென்றால் இறுகத் தழுவி இன்ப மழை பொழிவாள். இருங்கோவேள் மன்னனாகச் சென்றால் இறப்புலகிற்கு அனுப்பி வைக்கத் துடித்து நிற்பாள்.

அதிலும் மனக் குழப்பந்தான். நிம்மதியில்லை. எல்லாக் குழப்பங்களும் ஒரே அடியில் தீர்ந்து விடும், கரிகாலனைத் தொலைத்து விட்டால்! அதற்கு வேளிர் குடியினர் இனித் தயாராக இல்லை. சோழன் படைகளிடம் தாங்கள் பட்டபாடு போதுமென்று அவரவர்கள் அடங்கிப் போய் ஆமைகளாகக் கிடக்கிறார்கள். இந்தக் கானகத்து மரமாளிகையில சில நாட்கள் இலட்சிய வெறியுடன் உலவி இறுதியில் இங்கேயே மண்ணோடு மண்ணாக வேண்டியதுதான தன் வாழ்க்கையின் முடிவுபோலும் என்றெல்லாம் எண்ணி யெண்ணி உறுமிக் கொண்டு உறக்கத்தை வலிந்து வலிந்து கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

முத்துநகையை மீண்டும் ஒரு முறை பார்த்துவிட்டு வரலாம் என்ற ஆசை துளிர்த்தது. அவள் சிந்தும் அமுத மொழிகளைக் கேட்டுச் சற்று ஆறுதல் பெறலாம் என்ற எண்ணம் மேலோங்கிற்று.

இந்தச் சூழ்நிலையில் அவள் என்ன பேசப் போகிறாள் என்று அறியவும் அவா எழுந்தது. வீரபாண்டியனாகப் போகாமல் இருங்கோவேள் மன்னனாகப் போக வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். அதிலும் முத்துநகை காணுகிற இருங்கோவேள் முற்றிலும் வேறு உருவத்தில் இருக்கவேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டான்.

வேடமணியும் வேலை ஆரம்பமாயிற்று. காதில் கனத்த குண்டலங்கள், தலைவிரிகோலம், முரட்டு மீசைகள், முகத்தைக் கடுமையாகக் காட்டும் இளந்தாடி, மார்பிலே ஆபரணங்கள். அவனது பிரதானியர் பார்த்தாலே திடீரென்று அடையாளங் கண்டு பிடிக்கமுடியாத அளவுக்குப் புதிய இருங்கோவேள் மன்னன் புருஅடைபட்டிருக்கும் இடம் நோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

முத்துநகை அடைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வந்ததும் அங்குள்ள காவலன் அடையாளம் தெரியாமல் மன்னனைத் தடுத்து நிறுத்தினான். அவனி

டம் தன் வேடத்தை விளக்கிவிட்டு உள்ளே நுழைந்தான் இருங்கோவேள். அவன முதலில் பலகணி வழியே பார்த்தபோது அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த முத்துநகை, இப்போதுகூட அதுபோலவே கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். அவன் உள்ளே நுழைந்தபோது ஏற்பட்ட காலடியோசை கேட்டு அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அதிலிருந்து அவளும் சரியாகத் தூங்காமல் தூங்குவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறாள் என்பதை அவன் புரிந்துகொண்டான். எழுந்தவள், இருங்கோவேளை உற்றுப் பார்த்துவிட்டு "யார்?" என்று அதட்டலாகக் கேட்டாள்.

"மன்னன்!"

—என்று கம்பீரமாகப் பதில் கூறினான்.

முத்துநகையின் உடம்பெல்லாம் நடுங்கிற்று. அவள் இருதயம் படபடவென அடித்துக்கொண்டது. சுவாசப் பைகள் காற்றினால் நிரம்பி மார்பகம் விம்மி உயர்ந்து, பெருமூச்சுக்குப் பின்னர் பழைய நிலையடைந்த காட்சியை இருங்கோவேள் சுவைத்தவாறு நின்றுகொண்டிருந்தான். முத்துநகை தன்னைத் தானே தைரியப்படுத்திக்கொண்டு இருங்கோவேளுடன் கம்பீரமாகப் பேச முன்வந்தாள்.

"மன்னனா? எந்த நாட்டுக்கு?"

இந்தக் கேள்வி இருங்கோவேளின் உள்ளத்தை எந்த அளவுக்குக் குடைந்திருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை. அப்படியே இடிந்துபோய் நின்றான்.

"ஓகோ! இந்தக் காட்டுக்கு மன்னரா?"

—அடுத்த கேள்வியும் கேலியுடன் கலந்து எழுந்தது.

"அடிமைப் பெண்ணே! பணிவாகப் பேசு! வேளிர் குலத் தலைவன் இருங்கோவேள் ஒரு எரிமலை—நீ பனிமலர்! நினைவில் வைத்துக்கொள்."

"நான் எதையும் மறப்பதில்லை மன்னாதி மன்னரே! கரிகால் சோழரிடம் தாங்கள் பெற்ற மகத்தான வெற்றியைக்கூட நான் இன்னும் மறக்கவில்லை."

"வெற்றி மயக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் சோழ மண்டிலத்துக்கு விரைவில் பாடம் கற்பிக்கத்தான் போகிறேன். தோல்வி என் தோள்களை மேலும் வலுப்படுத்தியிருக்கிறதே தவிர என்னைத் துவளச் செய்து விடவில்லை."

"சரி சரி...இந்நேரத்தில் இங்கு என்ன வேலை?"

—அவனுடன் பேச்சுக் கொடுப்பது தன் காரியங்களைக் கெடுத்துவிடக்கூடும் என்று கருதிய முத்துநகை, தன்னைத் தானே சமாதானப்படுத்திக்கொண்டு பணிவுடன் பேச ஆரம்பித்தாள்.

"வேலையொன்றுமில்லை. என் மாளிகையில் சிறைப்பட்டிருக்கும் உனக்கு வசதிகள் போதுமானவைகளாக இருக்கின்றனவா என்று அறியவேண்டியதும் ஆவன செய்யவேண்டியதும் என் கடமையல்லவா?"

"மிகவும் நன்றி. நான் ஏன் இங்கு சிறைப்படுத்தப்பட்டிருக்கிறேன் என்று கூறலாமா?"

"மண்டபத்தில் மயங்கிக் கிடந்தாய், உன்னை என் ஆட்கள் இங்கு கொண்டுவந்து சேர்த்தார்கள். ஆணுடையில் இருந்த உன்னைக்கண்டு என் தங்கை தாமரை அழுது புலம்பினாள். 'அய்யோ அத்தான்' என்று அலறினாள். எனக்கு ஒரே திகைப்பு! அதைவிடத் திகைப்பு—உன் வேடம் கலைந்த நிகழ்ச்சி! அடடா—நீ பெண் என்பதை உணர்ந்ததும் என் தங்கைக்கு ஏற்பட்ட ஏமாற்றம் இருக்கிறதே அதை விவரிக்கவே முடியாது. தங்கை ஏமாந்தாள். ஆனால் நான் விழித்துக் கொண்டேன். சோழ நாட்டுக்கு எங்களைக் காட்டிக் கொடுக்கும் வஞ்சகியொருத்தி அகப்பட்டாள் என்று அகமகிழ்ந்தேன். அதற்குப் பிறகு உன்னைச் சிறை வைப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் சொல்!"

"சிறையில்தான் அடைத்து வையுங்கள்—அல்லது சித்ரவதை செய்து கொன்று போடுங்கள்; எனக்கு இனி எதைப் பற்றியும் கவலையில்லை. இனி எனக்கு விடுதலை கிடையாது என்று நன்றாகப் புரிகிறது. என் வாழ்வின கடைசிக் கட்டத்தில் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்; தயவு செய்து உண்மையைச் சொல்லுங்கள். வீரபாண்டியை என்ன செய்தீர்கள்?"

"வீரபாண்டி! யார் அந்த மதுரை ஒற்றனா? அவனைத்தான் படுகாயப்படுத்தி மரண வாசலுக்கு வழியனுப்பி வைத்துவிட்டார்களே என ஆட்கள்!"

—அந்த வார்த்தைகள் முத்துநகையின் காதுகளில் பேரிடி முழக்கமென அதிர்ந்தன. கண்களைப் பொத்திக்கொண்டு ஓவென அழுதாள். தான் செத்துவிட்டோம் என்று நினைத்து தனக்கெதிரே ஒருத்தி நின்று அழுவதைப் பார்த்து இருங்கோவேள் மனமுருகினான். திடீரென வேடத்தைக் கலைத்து வீரபாண்டியனாக வெளிப்பட்டுவிடலாமா என ஒருக்கணம் எண்ணினான். ஆனால் அவன் நிலைமை அவனைக் கட்டுப்படுத்தி எச்சரித்து விட்டது. எதிரே இருங்கோவேள் மன்னன் நிற்கிறான் என்பதையும் மறந்து "அத்தான்!" அத்தான்!!" என்று கதறிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள் முத்துநகை.

இருங்கோவேளும் தன்னை மறந்து அவளருகே சென்று "அழாதே கண்ணே!" என்று அவள் தோளைப் பிடித்தான்.

அவள் சோகமெல்லாம் எங்கேயோ பறந்து போயிற்று. "சீ!" எனத் திரும்பினாள். திரும்பிய வேகத்தில் இருங்கோவேளின் கன்னத்தில் 'பளார்' என ஒரு அறை கொடுத்துவிட்டாள். அந்த அடி அவனைக் கலங்க வைத்து விட்டது.

ஆனாலும் சமாளித்துக் கொண்டு, புலி போலக் குரலெழுப்பி—"என்ன துணிச்சல் உனக்கு? என் கையில் சிக்கிய பிறகு உன்னைச் சும்மா விட்டுவிடுவேன் என்று கனவு கூடக் காணாதே!" என்று கையைப் பிடித்து இழுத்துக் கட்டித் தழுவிட முயன்றான். வழியேதுமறியாத முத்துநகை, அங்குமிங்கும் ஓடித் தன்னையும் கற்பையும் காப்பாற்றிக் கொள்ள முயன்றாள்.

"உன்னை இன்று நான் விடப்போதில்லை!" என்று இருங்கோவேள் அவளைத் தழுவிக் கொண்டான்.

அவனது முரட்டுப் பிடியிலேயிருந்து முத்துநகை தன்னை விடுவித்துக் கொண்டு அவனது இடையில் இருந்த கட்டாரியைத் தன் கையிலே எடுத்துக் கொண்டு அவனை எதிர்ப்பதற்குத் தயாரானாள். தன் அருமைக் காதலியின் மன உறுதியையும்—கற்பின் திண்மையையும் — வீரத்தையுங் கண்ட இருங்கோவேள் பூரித்துப் போனான். இருந்தாலும் மேலும் அவளுடன் விளையாட வேண்டும் என்ற எண்ணத்தில் தீக்கண்களுடன் அவளை நெருங்கினான். முத்துநகை அவனை நோக்கிக் கட்டாரியை ஓங்கி விட்டாள்.

தன் காதலனைத் தானே கொன்று சாய்க்க வேண்டிய சூழ்நிலை அவளையறியாமலே உருவாகிக் கொண்டிருந்தது. அவனும் அவளிடம் பாய்ந்துவிட்டான். அவள் கட்டாரியை அவன் மார்புக்கு நேரே கொண்டு வந்து விட்டாள்.

ஆனால் வீரனான இருங்கோவேள் அவள் கரத்தை மிக லாவகமாகப் பிடித்துக் கொண்டு அவள் முகத்தோடு தன் முகத்தை ஒட்டுவதற்கு முயன்றான்.

அந்தச் சமயத்தில் "நிறுத்து அண்ணா நிறுத்து!" என்ற கூச்சலுடன் தாமரை உள்ளே நுழைந்தாள். தாமரை எப்படி அங்கு வர நேரிட்டது?

பெருந்தேவி வெளியேறிய செய்தியை இருங்கோவேளிடம் சொல்வதற்குச் சென்ற காவலர்கள் மன்னன அங்கு இல்லாத காரணத்தால் தாமரையிடம் சென்று செய்தியைக் கூறிவிட்டார்கள். அவளும் அண்ணனைத் தேடிப் பார்த்து விட்டுக் கடைசியாக முத்துநகை அடைபட்டிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தாள். அங்கு காவல் புரிந்து கொண்டிருந்த வீரன், இருங்கோவேள் மாறுவேடத்துடன் முத்துநகையிடம் பேசிக்கொண்டிருப்பதைக் கூறிவிட்டான். உடன் தாமரை உள்ளே நுழைந்த போதுதான் அண்ணன் முத்துநகையிடம் அடாத செயல் புரிவதைக் கண்டு கூச்சல் போட்டுவிட்டாள். தங்கையின் குரலைக் கேட்ட இருங்கோவேள் முத்துநகையை விட்டு விட்டுத் திரும்பினான்.

"தாமரை! நீ எங்கே வந்தாய்?"

"வந்தது தவறா? அண்ணா! இது என்ன அக்கிரமம்! இதுவரையில் உன்னை நாங்கள் உத்தமன் என்றலலவா கருதிக்கொண்டிருந்தோம். பழிவாங்கத் துடிக்கும் காரணத்தால் என் அண்ணனுக்கு அடிக்கடி கோபம் வருகிறது. சிலரைக் கொடுமைப்படுத்துகிறார். ஆனால் அவரைப் போன்ற ஒழுக்கசீலர் யாருமேயில்லையென்றல்லவா கூறிக்கொண்டிருந்தேன். என்றுமில்லாத அநியாயம் இன்று ஏன் அண்ணா?"

"தாமரை! இதிலெல்லாம் நீ தலையிடாதே!...

"தயவுசெய்து என்னை மன்னிக்கவும். அவள் இங்கு சிறைப்பறவையாக இருக்கலாம். அதற்காக மன்னனின சிற்றின்பப் பதுமையாக இருக்க வேண்டுமென்று நினைப்பதை நான் மறுக்கிறேன், தடுக்கிறேன்."

"என் காரியங்களைத் தடுக்க யாராலும் முடியாது. மரியாதையாக வெளியே போய்விடு!...."

"அண்ணா! நீ எப்படியாவது அழிந்துபோ எனக்கென்ன; நான் சொல்லவந்ததைச் சொல்லிவிடுகிறேன் — அண்ணியைக் காணவில்லை. குதிரையிலேறி ரகசியமாக எங்கேயோ போய்விட்டார்களாம்."

"ஆ! என்ன? அரசியைக் காணவில்லையா? எங்கே போனாள்?"

"இந்த அக்ரமங்களைக் கேள்விப்படக்கூடாது என்று எங்கேயோ போய்விட்டார்கள்."

—இருங்கோவேள் சிலையென நின்றுகொண்டிருந்தான். தாமரை அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள். "பெருந்தேவி!" என நடுங்குங் குரலில் ஒரு கூச்சல் கிளம்பிற்று அவன் வாயிலிருந்து! உடனே அந்த இடத்தை விட்டுத் தன் மாளிகை நோக்கி விரைந்தான். முத்துநகை, அழுதவாறு மூலையில் நின்றுகொண்டிருந்தாள். அவளிடம் ஆறுதல் எதுவும் கூற விரும்பாத தாமரை, காவலர்களை எச்சரித்துவிட்டு வெளியே சென்றாள். பழையபடி அந்த இடம் பூட்டப்பட்டது. தன் கையிலிருந்த கட்டாரியின் முனையை விரல்களால் தடவிப் பார்த்தவாறு சிந்தனையில் ஆழ்ந்தாள் முத்துநகை.

[தொடரும்]

அந்தோ-ஆரூர் வேங்கை மறைந்தது!

சுயமரியாதை இயக்கச் சுடரெனத் திகழ்ந்தவரும்—திராவிடர் இயக்கத்துப் பெரு வீரர்களில் ஒருவரும், நமது நண்பருமான திருவாரூர் வி. ஜி. அரங்கராசு அவர்கள் சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து 23-ம் நாள் இரவு 12 மணிக்கு இயற்கை யெய்தினார் என்ற நெஞ்சு திடுக்கிடும் தகவல் கேட்டு ஆறாத் துயர் அடைந்தோம்.

தயவு தாட்சண்யமின்றி நிமிர்ந்த நோக்குடன் பணிபுரிந்த செயல் வீரர் அவர். மனதில் பட்டதை மறைக்காமல் அஞ்சாமல் எடுத்துரைக்கும் ஆற்றல் நிறைந்தவர் அவர். அருமைத் துணைவியாரையும் அன்புக் குழந்தைகளையும், முதுமை நிரம்பிய தாயாரையும் அவர்பால் நீங்காத அன்பு கொண்டிருந்த நம்மையும் கண்ணீரில் மிதக்கவிட்டு அவர் மறைந்த நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை,

அவரது பிரிவால் வருந்தும் அவர் மூத்த மகன் தம்பி திருவிடத்துக்கும்—அன்னைக்கும் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரியதாக்குகிறோம்.

ஆதீனத்திலே...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

○ சோமபானம் குடித்து சோம்பிக் கிடக்கும் உள்ளத்தைத் தட்டி விட்டார்களாமே முன்பெல்லாம்; அந்த சுந்தர வாழ்க்கைதான் தேவை என்கிருரா; அவர்?

○ டீல்லாடும் கிழவனைப் போல் தள்ளாடி—பாதம் சிந்தும் இரத்தத்தைப் பார்த்து முணகி பல்லக்கு சுமப்பார்கள் அன்று — ஆகவே, கடல் தாண்டி வந்த 'மோட்டார்' வேண்டாம்; காற்ருேடு போட்டியிடும் நீராவி வண்டியும் வேண்டாம்—என்று சொல்லி விடுவாரா, அந்தப் பண்டார சன்னதி?

○ நடையிலே- உடையிலே— உணவிலேபுதுமையை ஏற்றுக் கொள்கிற அவரது மனம் மொழியிலே மட்டும் பின்னல் ஓடுவானேன்?

பொதுவுடமை நாடான சோவியத் காட்டில், லெனின் கிராட் சர்வ கலாசாலையில் தமிழ் தழைத்து நிற்கின்ற சிறப்பைக் குறித்து நமக்கு செய்திகள் கிடைக்கின்றன. கீழ்த் திசை மொழிகளிலே தமிழுக்கு முதலிடம் தரப்படுகிறதாம் அங்கு!

○ 'வணக்கம்'—என்று சொல்லிச் சொல் விளக்கி, அப்படிச் சொல்லும்படி மற்றவர்களைத் தூண்டுவதை நான் என் கடமையாகக் கொண்டிருக்கிறேன்" — இப்படிச் சொல்கிருர், அங்கே தமிழ் கற்றுத் தருகின்ற "செம்பியன்" என்ற தோழர்!

பெயரைக் கேட்டதும் தமிழகத்திலிருந்து சென்றவரோ என்ற சந்தேகம் ஏற்படலாம். பிறப்பிலே ரஷ்ய நாட்டுக்காரரான அந்தத் தோழர் தனது எஸ். ஜி. ருடின் என்ற பெயரைத்தான் தமிழாக்கிக் கொண்டிருக்கிருர்.

அங்கே வணக்கம் வாழ்கிறது; ஆனல் இங்கே தமிழ் புரண்ட நாக்கு தகாதன பேச எப்படித் தான் துணிந்தது? தமிழ் பெற்ற அருஞ்செல்வங்கள் குறித்து இத் தரணியே பரணி பாடுவதை இவர்கள் மறந்தது ஏன்?

● உலகப் புகழ் பெற்ற வள்ளுவனின் குறளை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்தான், இ. ஜே. ராபின்சன்! பிரெஞ்சு மொழியிலே உருவாக்கிருன், ஏரியல்! ஜெர்மனியிலே நடமாட விட்டான் தனது மொழி உருக் கொடுத்த காருமரர்!

தமிழின் பெருமை யுணர்ந்த அந்த வெளி நாட்டுக்காரர்கள் சிரிப்பார்கள், தன்னைப் பெற்ற தமிழன்னையின் அங்கங்களை வெட்டுகின்ற இத்தகைய துரோகிகளை பார்த்து!

அன்னியனை வணங்கும் 'அலிகள் — அவனை அண்டிப் பிழைக்கும் எலிகள் — அடக்கிக்கொள்வார்களா தங்கள் நாவை?

கலப்படம்

பேச்சுப் போர்வைக்குள்ளே 'பெரியவர்கள்' சில பேர்!

இப்போது பத்திரிகைகளில் 'கண்ணுமூச்சி' விளையாட்டு அதிகமாகிவிட்டது! ஒரு கருத்துக் கோவையைச் சொல்லி இது எந்த எழுத்தாளருடையது — என்று கண்டுபிடிக்கச் சொல்கிருர்கள். அல்லது கையெழுத்து வகைகளைக் காட்டி இது எந்தத் தலைவருடைய கையெழுத்து என்று கண்டு பிடிக்கச் சொல்கிருர்கள். அதே முறையில் இந்தியத் துணைக் கண்டத்து அரசியல்வாதிகளின் பேச்சு கீழே கொடுக்கப் பட்டுள்ளது. சீக்கிரம் கண்டு பிடிப்பதற்காக அப்பேச்சுடன் கைச் சரக்கும் சேர்க்கப்பட்டுள்ளது! இப்போது கண்டுபிடியுங்கள் பார்க்கலாம், எந்தப் பேச்சு எந்தத் தலைவருடையது என்று!

★

1. அடியேனுக்குக் கன்னியாகுமரியிலிருந்து சதுரகிரிமலை வரை செல்வாக்கு உண்டு. ஆங்கிலேய வெறியர்கள் இந்த நாட்டை ஆண்டபோது, அவனை எதிர்த்து முதலில் குரல் எழுப்பியதும் அடியேனே! காந்தி என்பான் மகாத்மா பட்டத்தைப் பெறுவதற்குமுன்னுலே நான் ஆத்ம விசாரணையில் இறங்கி விட்டேன். காந்தியைப் போல ஒரு பேடி கிடையாது; பயந்து நாய்போல காலடியில் கிடந்து பெற்ற சுதந்திரம்தான் இது! அதனுல்தான் நல்ல தலைவர்கள் இல்லை. நல்ல தலைவர்கள் இருந்தால்தானே நாடு முன்னேறும்? கன்னி சூதகமானுல் கங்கையில் மூழ்கலாம். கங்கையே சூதகம் அடைந்தால்...! (இந்த இடத்தில் நீங்கள் சிரிக்க வேண்டும். உம்.......சிரியுங்கள்!)

நாடு முன்னேற உயர் சாதித் தலைவர்கள் அவசியம்! — நாம் இன்று செல்வாக்கற்றிருக்கலாம். ஆனுல் வங்கத்து சிங்கம் — மறைந்து மாண்டு சுடுகாட்டுச் சாம்பல் ஆகி விட்டதாகக் கூறுகிருர்களே அந்த சிங்கம் வந்தால் இந்தியா பெரும் புரட்சிக் காடாகிவிடும். அந்த சிங்கம் உயிரோடு இருக்கிறது. இப்போது கூட சந்தித்தேன். எங்கே? சீனுவுக்கும் இந்தியாவிற்கும் சண்டை நடக்கும் இடத்தில்!

★

2. சீனுவைக் கண்டு அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. நம் ஆட்களிடம் ஆயுதம் நிறைய இருக்கிறது. அதோடு நம்மிடம் ஆத்ம பலம் இருக்கிறது. சீனு தாக்கினுல் நாம் சும்மா இருந்து விட மாட்டோம். அவர்கள் முன்னேறுமல் தடுப்பதில் சளைக்க மாட்டோம்! நம் ராணுவம் பலம் மிகுந்தது. சிலர் இப்போதே சீனுமீது பாய வேண்டும் என்கிருர்கள். அவர்கள் எதிர்க் கட்சிக் காரர்கள். எனக்குக் கோபம் கொந்தளித்துக் கொண்டு வருகிறது. என்ன தெரியும் இவர்களுக்கு? நம் ராணுவம் சீன ராணுவத்தை எத்தனை நாள் எதிர்க்கும் என்று இவர்களுக்குத் தெரியுமா?

இந்த எதிர்க் கட்சிக்காரர்கள் தான் சொல்லுகிருர்கள் என்ருல் முன்பு ராணுவத் தளபதியாக இருந்த கரியப்பாகூட சொல்கிருரே? அவருக்கென்ன மூளைக் கோளாரு? நம்மிடமிருக்கும் ஆயுதம், ராணுவம் எல்லாம் பழைய காலத்தவை. மக்களைப் பயமுறுத்தத்தான் வைத்திருக்கிருேமே தவிர சண்டை போடவா வைத்திருக்கிருேம்? சண்டை போட்டால் நம் நிலைமை என்ன என்று தெரிந்தும் கரியப்பா பேசுகிருரே! சீ; நான்சென்ஸ்...!

★

3. எதிர்க்கட்சிக்காரப் பயலுக எல்லாம் சேர்ந்துக் கிட்டானுக. சோற்றுப் பஞ்சம் வந்து விட்டது. ஆகவே சர்க்காரைக் கண்டியுங்கள்—என்று 'சவடால்' அடிக்கிருனுக. ஏன் சோத்துப் பஞ்சம் வந்தது? என்னருமைத் தோழர்களே! கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள். சுதந்திரம் வருவதற்குமுன் எல்லாம் குடித்துக் கொண்டிருந்தானுக. ஆனுல் குடி இப்போ அறவே நின்னு போச்சு. அதுனுலே எல்லாம் அதிகமாகத் தின்ன ஆரம்பிச்சுட்டானுக. ஆக, சோற்றுப் பஞ்சம் வந்துட்டடது. மலையாளத்துக்கு அரிசி போகிறதினுலே அரிசிப் பஞ்சம் வந்துட்டுது...என்கிருர்கள். இது பெரிய கயவாளித்தனமான பேச்சு.

அறுபது வருஷத்திற்கு முன்னுலே நான் அரிசி வியாபாரம் செய்த காலத்திலேயே 'வாகின்' கணக்கா அரிசி அனுப்பினேன். இப்போது என்ன புதிதாக அனுப்புவது? எல்லாரும் பதவியைப் பிடிக்கத்தான் சர்வ கட்சியை ஏற்படுத்தியிருக்கானுக; பின்னே சர்வ கட்சியாவது வெங்காயமாவது...?

★

4. எங்கள் கட்சிக்குள்ளேயே சிலர் எங்களை எதிர்க்கிருர்கள். அவர்களை சும்மாவிடமாட்டோம். ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம், 'அவர்கள்'மேல் !.......'அவர்கள்' சொல்வதும் சரியாகத்தான் இருக்கிறது. சீனு தேசம் எல்லையை ஆக்ரமித்தது சரியில்லை. ஆனுல் சீனு இப்போதிருக்கும் இடத்திலேயே இருக்கலாம். சீனர்கள் பேரில் தப்பில்லை. இந்திய அரசாங்கத்தின் பேரில்தான் தப்பு! ஆகவே எங்களை நம்புங்கள்! உலகத் தொழிலாளர்களே! (சீனு தொல்லையை மறந்துவிட்டு) ஒன்றுபடுங்கள்!

★

5. சகோதர சகோதரிகளே! இன்று நமக்குசுதந்திரம் வந்து பனிரெண்டுஆண்டுகள் ஆகிவிட்டன. சுபிட்சமாக இருக்கிருேம். ஆனுல் எதிர்க்கட்சிகள் குறை சொல்லிக்கொண்டே இருக்கின்றன. ஏன்? அது அவா வழக்கம்! நாடு நாசப் பாதையில் போகிறது. நாங்கள் 'பிரேக்' போடுகிருேம்—என்று சொல்ருக. அது தப்பு. அது தப்புன்னு, நாடு இருந்த நிலையிலேயே இருக்குதோன்னு தப்பா நீங்க நினைக்கப்படாது. இந்த தி. மு. க. கள் சத்தம் போட்டு பேசருக. அதனுலே கூட்டம் சேருது. நீயும் சத்தம் போடலாமே—என்று நீங்கள் கேட்கலாம். ஆனுல் எனக்கு இன்னிக்கு உடம்புக்கு சரியில்லை. ஒரே குளிர்காத்து. ஆகவே நீங்கள் எல்லாம் காங்கிரசை மறக்கப்படாது. கோரிக்கைகளையெல்லாம் ஏதோ சொல்கிறீர்கள்....! பார்க்கலாம்! பார்க்கலாம்!

★

6. பொது மக்களே; மகா ஜனங்களே!

இப்போது அரசியல் கெட்டு வருகிறது. இது நம் பாரதத்திற்கு நல்லதல்ல; அரசியல் கெட்டால் எல்லாம் கெட்டுக் குட்டிச் சுவராகிவிடும். அரசியலைக் கெடுத்தவர்கள் கதி என்ன ஆயிற்று என்பதை சரித்திரம், வரலாற்று ஆதாரங்களோடு என்னுல் பிரசங்கிக்கமுடியும். பிரான்சு நாட்டிலே ஜார் மன்னன் இருந்தானே அவன் அரசியலைக் கெடுத்தான்; ஏன் சத்தம் போடுகிறீர்கள்? பிரான்சு நாட்டில் ஜார் மன்னன்தான் இருந்தான். லூயி மன்னன் என்று கூறுகிறீர்கள்? கிடையாது. பிரான்சு நாட்டில் ஜார் மன்னன்தான்! மந்திரியைவிட உங்களுக்கு என்ன அதிகமாகத் தெரியும்?... ஆகவே அரசியல் கெட்டுவிட்டது! கெட்டது யாராலே? நடிகர்களால்தான்! அவர்கள் அரசியலில் புகுந்து கெடுத்துவிட்டார்கள்....அவர்கள் அரசியலில் புகாமல் இருந்தால் எவ்வளவோ நன்ருக இருக்கும்!

★

7. எல்லோரும் நடிகர்களாக வேண்டும்! ஆமாம்; மந்திரிதான் சொல்கிறேன். எல்லோருக்கும் நடிக்கத்தெரியவேண்டும். நெருக்கடி வரும்போது நெருக்கடி வராததுபோல் சிரித்தமுகத்துடன் இருக்கவேண்டும். அரசியல்வாதிகள முதற்கொண்டு எல்லோருக்கும் என்னுடைய இந்த உபதேசம் பொருந்தும்.

★

இதற்குரிய விடை :

1. முத்துராமலிங்கத் தேவர்
2. நேரு
3. பெரியார்
4. அஜாய்கோஷ்
5. காம்ராஜ்
6. கக்கன்
7. பக்தவத்சலம்

அண்ணா பேச்சில்...

இன்று, விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்ன? என்ற கேள்வியை அமைச்சர்களே கேட்டுக் கொண்டால் என்ன பலன்?

அதன் முக்கிய காரணம், டெல்லி சர்க்காரில் ஏற்பட்டிருக்கிற பணவீக்கம் தான்! அதைத்தான் தி. மு. கழகம், சென்ற பொதுத் தேர்தலில், 'காட்டு வாட்டம் போக் போக்கிட — சர்க்கார் நோட்டடித்தால் போதாது' என்று சுவரொட்டிகள் மூலம் அறிவித்தது.

அதிகாரம் இங்கே இல்லை— அத்தனையும் வடவர் கையில் இருக்கிறது! விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமானுல் டெல்லி சர்க்காரில் ஏற்பட்டிருக்கிற பணவீக்கத்தைக் குறைக்கவேண்டும்.

ஒரு நாட்டில் நோட்டை மட்டும் ஏராளமான அளவில் அச்சடித்துவிட்டால் போதாது. அதற்குத் தகுந்த அளவில் நாட்டில் செல்வம் பெருகவேண்டும். இன்றைக்கு இந்திய சர்க்கார், ஏராளமான அளவில் நோட்டு அச்சடிக்கிருர்கள். மாட்டுத் தோலை வைத்துக் கொண்டு பால் கறக்க வேண்டும் என்ருல் பால் கறக்காது; பால் கறப்பதற்குப் பசு இருக்கவேண்டும்.

நம்முடைய நாட்டில் இப்போது ஏற்றுமதி அடியோடு குறைந்துவிட்டது. பல பொருட்களை நாம் வெளி நாடுகளிலிருந்து வாங்குகிருேம். இப்படி வாங்குவதால் நம்முடைய நாட்டில், இருக்கிற தங்கம் வெளிநாட்டுக்குப் போகிறது. நோட்டைக் கொடுத்தால் வெளிநாட்டான் வாங்கமாட்டான். எல்லா நாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொண்டிருக்கிற பொருள் 'தங்கம் ஒன்றுதான். எனவே நம்முடைய நாட்டிலிருந்து தங்கம் பூராவும் வெளி நாடுகளுக்குப் போகிறது.

வெளிநாடுகளிலிருந்து தங்கம் நம்முடைய நாட்டிற்கு வரவேண்டுமானுல், நம்முடைய நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் பொருட்கள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். அப்போது தான், வெளிநாடுகளிலிருந்து தங்கம் நம்முடைய நாட்டுக்கு வரும்; அப்படி வந்தால்தான் நம்முடைய நாட்டில் பணவீக்கம் ஏற்படாது. பணவீக்கம் ஏற்பட வழியில்லை என்ருல் விலைவாசிகள் உயருவதற்கு வழியில்லை!

தயாராகிறது!

புத்தம் புது முறையில்-தமிழ்ப்
புவனம் வியக்கும் வகையில்

பொங்கல் வாழ்த்துக்கள்

வெளியிடுவோர்: நாதன் கம்பெனி

விற்பனை உரிமை: முத்துவேல் பதிப்பகம்

77, மதுரை ரோடு : : திருச்சி-8.

"இரும்புப் பெட்டி"க்கும் திறமை தேவை!

"தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்!"

—இப்படி இது பழமொழி!

"பணம் (கடன் வாங்கிப்) போடுபவரெல்லாம் படத் தயாரிப்பாளர்!"

—இது இந்திய உபகண்டத்திலே உலவுகிற புதுமொழி!

பத்துப் பேர் ஆளுக்கு ஆயிரம் ரூபாய் முதல் போட்டு ஒரு படம் ஆரம்பித்தார்களேயானால் அந்தப் பத்துப் பேரும் 'தயாரிப்பாளர்'—என்ற பட்டத்துக்கு உரியவர்களாகிவிடுகின்றனர்.

படத் தயாரிப்பு என்றால் வீசை என்ன விலை என்று கேட்கிறவர்களும், இதுவரை ஸ்டுடியோவுக்குள் ஒருமுறையாவது அடியெடுத்து வைக்காதவர்களும்கூட சில சமயம் இந்தப் பட்டங்களைச் சூட்டிக் கொள்கிறார்கள்.

ஆனால் ஹாலிவுட்டிலே இப்படிப்பட்ட பழக்கங்கள் கிடையாது.

படத் தயாரிப்பின் அரிச்சுவடி கூட அறியாதவர்களை அவர்கள் 'தயாரிப்பாளர்கள்'—என்று ஒப்புக்கொள்வதில்லை.

இன்னும் பார்க்கப்போனால் அங்கே தயாரிப்பாளர் படத்தின் வெற்றியை நிர்ணயிக்கவேண்டிய மகத்தான பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அங்கே இரும்புப் பெட்டிக்கும் தயாரிப்பாளருக்கும் இருக்கும் சம்மந்தத்தைவிட, மூளைக்கும் தயாரிப்பாளருக்கும் இருக்கும் தொடர்புதான் வலுவுள்ளதாக இருக்கக் காண்கிறோம்.

உதாரணமாக, ஹாலிவுட்டின் பெரிய நிறுவனங்களுள் ஒன்றான இருபதாவது நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியினருக்காக 'வால்டர் வேன்கர்' என்பவர் ஒரு பிரமாண்டமான படத்தைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

தயாரிப்பாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் அவர் செய்த முதல் வேலை என்ன தெரியுமா?

'கிளியோ பாட்ரோவின் வாழ்க்கையும் காலமும்'—என்னும் புத்தகத்தின் உரிமையை விலைக்கு வாங்கினார்.

இப்போது கதை தயாராகிவிட்டது; அடுத்தது?

நிகல் பால்ஸ் என்னும் எழுத்தாளரை அழைத்து, அவரோடு விவாதித்து, திரைக்கதையை அமைக்கச் சொன்னார்.

திரைக் கதையும் வசனமும் தயாராகிவிட்டன; அடுத்து....?

இந்தப் படத்தில் யார் யார் நடித்தால் நன்றாக இருக்கும்—என்று யோசனை செய்தார். இறுதியில் கிளியோ பாட்ராவாக நடிப்பதற்கு எலிசபெத் டெயிலர் என்னும் நடிகையை ஒரு மில்லியன் டாலருக்கு (நாற்பத்தி ஏழு லட்சம் ரூபாய்) ஒப்பந்தம் செய்திருக்கிறார்.

கதை, திரைக் கதை, வசனம், நடிகர் தேர்தல்—இவ்வளவும் முடிந்துவிட்டன.

ஆமாம்; இந்தப் படத்தின் டைரக்டர் யார்?—என்று கேட்கிறீர்களா?

—இனிமேல்தான் தயாரிப்பாளர் டைரக்டரைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்!

படம் தயாரிக்க வேண்டுமென்ற யோசனை உருவாகிற வரை படத் தயாரிப்பின் ஒவ்வொரு அணுவையும் ஆட்டி வைக்கும் மேலைநாட்டுப் படத் தயாரிப்பாளர் எங்கே? பணத்துக்குச் சொந்தக்காரர்—என்பதைத் தவிர வேறொன்றுமறியாத நமது நாட்டுப் படத் தயாரிப்பாளர் எங்கே?

அதிசய நாடகமேடை

அமெரிக்காவில் தேசியப் பண்பாட்டு நிலயம்—என்ற ஒரு அதிசய நாடகமேடையை நிறுவதற்கான திட்டங்களை ஜனாதிபதி ஐசன்ஹோவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அந்த நாடக மேடையில் அமெரிக்காவின் சுதந்திர ராஜ்யங்கள் தத்தம் கலைகளைப் பரிமளிக்க வைக்கும். இந்நிலயத்தைக் கட்டி முடிக்க 6 கோடியே 10 லட்சம் டாலர் செலவாகுமாம்.

இந்தக் கட்டிடத்தில் முழு தியேட்டர், இசை யரங்கு, நடன மேடை, பொது மன்றம், சிற்றுண்டிச் சாலைகள்; திறந்தவெளி மேல்மாடி, அலுவலகங்கள் மற்ற வசதிகள் எல்லாம் நிறைந்த புதுமையாக இருக்குமாம்!

கெய்ரோவில் தமிழ்ப் படம்

அத்திபூத்த சேதி போன்றது தான் தமிழ் பேசும் படம் வெளிநாடு செல்லும் செய்தி ஆனால் நாடோடி மன்னன், சிவகங்கை சீமை, கட்டபொம்மன், கல்யாணப்பரிசு போன்ற 100 நாட்கள் ஓடிய சில தமிழ்த் திரைப் படங்கள் கெய்ரோவில் நடக்கவிருக்கும் பட விழாவிற்கு செல்லவிருக்கின்றன எனும் இன்பச் செய்தி கேட்டு தமிழ் மக்கள் இன்புறுகின்றனர்.

எல்லாரும் இந்நாட்டு மன்னர்

ஜுபிடர் படத்தயாரிப்பு நிறுவனத்தார் தயாரித்து வரும் பிரமாண்டமான தயாரிப்பாம் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' வேகமாக வளர்ந்து வருகிறது.

மு. கருணாநிதி திரைக்கதை வசனம் அமைக்கும் இப்படத்தில் ஜெமினி கணேசன் அழகு தமிழ் பேசி உணர்ச்சிபொங்க நடித்துள்ளார். மற்றும் சரோஜா தேவி, எம். என். ராஜம், நம்பியார், டி. கே. பகவதி முதலியோர் நடிக்கின்றனர். இப்படத்தை டி. பிரகாஷ்ராவ் டைரக்ட் செய்கிறார்.

அறிவிப்பு

பத்திரிகைக்குத் தேவையான அச்சுத்தாள் கிடைக்காத காரணத்தால், இவ்வார 'முரசொலி' இதழ் 10 பக்கங்களுடன் வெளிவருகிறது—அடுத்த இதழ் வழக்கம்போல் 12 பக்கங்களுடன் வெளிவரும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—நிர்வாகி.

மனிதனின்...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

மும்—வெளிநாடுகளின் உதவியோடு—நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தாங்கி வந்த துருக்கியர்களின் ஆதிக்கத்தை உதறித் தள்ளி சுதந்தர நாடாயிற்று.

மாதவி, அடிமையாக வாழ மனிதன் என்றுமே விரும்பியதில்லை. அடிமைத் தனத்தை முறித்தெறியும் வரையில் அவனுடைய ஆத்மா சாந்தி யடைவதில்லை.

அதற்காக எந்த விலையையும் கொடுக்க அவன் தயங்குவதும் இல்லை. பொலிவர், மாஜினி, கரிபால்டி ஆகியோரின் வாழ்க்கை உணர்த்தும் பாடம் இது தான்.

உன் அன்புள்ள.

அகத்தியன்.

கேரளத்திலே நம் குரல்!



22—11—59 அன்று பாலக்காட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், ஆசிரியர் மு. க. பேசிக் கொண்டிருக்கிறார்—கூட்டத்தின் மற்ற பகுதிகளையும் காணலாம். — புகைப்படம்: ஜமால் ஸ்டுடியோ, பாலக்காடு]

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, "முரசொலி" அச்சகம் 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு